**Si Capital & Financial Services Limited**

Let's talk Forex

*Where Forex standards are set, not Just met*

14.03.2024

To
The General Manager – DCS
Listing Operations – Corporate Service Department
BSE Limited

**Scrip Code: 530907**

Dear Sir/ Madam,

**Sub: Newspaper Advertisement on Notice of Extra-Ordinary General Meeting and information on E-voting**

Further to our letter dated 13th March 2024, we are enclosing herewith the extracts of Newspaper advertisements published on March 14, 2024 in Business Line (All India edition) and the Hindu (Coimbatore Edition) with respect to the Extra-ordinary General Meeting of the Company scheduled to be held on Friday, April 05, 2024 at 03:00 PM (IST) through Video Conferencing / Other Audio-Visual Means.

Kindly take the same on record.

Thank you.

**For S.I. Capital & Financial Services Limited**

SREERAM G
Digitally signed by SREERAM G
Date: 2024.03.14 12:27:30 +05'30'

**Sreeram Gopinathan Nair**
**Managing Director**
**Din: 05143385**

Encl: As above

Regd. Office No.27, First Floor, New Scheme Road,
Pollachi, Coimbatore, Tamil Nadu 642001
CIN : L67190TZ1994PLC040490
Tel : 04259 – 233304/05, E-Mail : info@sicapital.co.in
Website : www.sicapital.co.in

TAMILTH Coimbatore 1 Regional_02 D ARUL SELVAN 225642 HT81561



# கோவை உட்பட 4 மாவட்டங்களில் புதிய திட்டப் பணிகள் தொடக்கம்

# 57,325 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## ● பொள்ளாச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**● பொள்ளாச்சி**

பொள்ளாச்சியில் நடந்த விழாவில், நான்கு மாவட்டங்களை சேர்ந்த 57,325 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆச்சிபட்டியில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ரூ.1273.51 கோடி மதிப்பிலான திட்டங்களை பயனாளிகளுக்கு அர்ப்பணித்தார். கோவை மாவட்டத்தில் 65, திருப்பூர் மாவட்டத்தில் 79, ஈரோடு மாவட்டத்தில் 86, நீலகிரி மாவட்டத்தில் 43 முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். அதேபோல, கோவை மாவட்டத்தில் 12, திருப்பூர் மாவட்டத்தில் 14, ஈரோடு மாவட்டத்தில் 6, நீலகிரி மாவட்டத்தில் 3 புதியதிட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

அத்துடன், கோவை மாவட்டத்தில் 19,329, திருப்பூர் மாவட்டத்தில் 7503, ஈரோடு மாவட்டத்தில் 3156, நீலகிரி மாவட்டத்தில் 27,337 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் பேச தொடங்கிய முதல்வர் ஸ்டாலின், 'பொதியை ஏற்றி வண்டியில பொள்ளாச்சி சந்தையிலே' என்ற பாடலை சுட்டிக்காட்டி பொள்ளாச்சியின் சிறப்புகளை விளக்கினார். கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் திமுக அரசு செய்த பணிகளை பட்டியலிட்டார். தொடர்ந்து, அவர் பேசியதாவது: அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். மேற்கு மண்டலத்தை அதிமுக கோட்டை என்கிறார்கள். அவர்கள் மேற்கு மண்டலத்திற்கு என்ன நன்மை செய்தார்கள்? பொள்ளாச்சி பாலியல் சம்பவம், கொடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை சம்பவம், ஜல்லிக்கட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல், தூத்துக்குடியில் 11 பேரை சுட்டது எந்த ஆட்சியில்? குட்கா விவகாரத்தில் லஞ்சம் கொடுத்த பட்டியலில் அமைச்சர், டிஜிபி பெயர் இருந்தது. அந்த வழக்கில் குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யாத கூட்டணியினர், இன்று உத்தமர் வேடம் போடுகின்றனர்.

பொள்ளாச்சி பகுதியில் வேர் வாடல் நோய் காரணமாக பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அகற்ற 14 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். உழவர்களுக்கு 3 லட்சம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். 127 ஒழுங்கு முறை விற்பனை கூடம் மூலம் தேங்காய்கள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும். தென்னை விவசாயிகள் நலன் கருதி கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்யப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# அரசு விழாவில் அரசியல் பேசிய முதல்வர்

## வானதி சீனிவாசன் கண்டனம்

**● கோவை**

கோவை தெற்கு தொகுதியில் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் தொடக்க விழா நேற்று நடந்தது. எம்எல்ஏ வானதி சீனிவாசன் தலைமை வகித்து, திட்டங்களை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார்.

மாநகராட்சி 64-வது வார்டு புலியகுளம் பெரியார் நகர், 82-வது வார்டு இஸ்மாயில் ராவுத்தர் வீதி, 67-வது வார்டு காந்திபுரம் நகர பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரங்களின் செயல்பாட்டை தொடங்கி வைத்தார். 66-வது வார்டு புலியகுளம், தாமு நகரில் அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து மக்கள் மற்றும் குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

பின்னர் வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பொள்ளாச்சியில் அரசு மேடையை அரசியல் மேடையாக மாற்றி அநாகரிகமாக முதல்வர் பேசி இருக்கிறார். தமிழகத்தில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மத்திய அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்ட தொடக்க விழாவில் மோடி அருகே ஸ்டாலின் அமர்ந்திருந்தார்.

நியாயவிலை கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்க வேண்டும் என நான் விடுத்த கோரிக்கை குறித்து தமிழக அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் இலை வாடல் நோய் தாக்கிய தென்னை மரங்களை வெட்டி அகற்ற ரூ.10 கோடி நிதி வழங்கப்படும் என கூறுகிறார்.

ஒவ்வொரு முறையும் பொய் பேசி தான் திமுக ஆட்சிக்கு வந்துள்ளது. மத்திய அரசு சார்பில் தமிழகத்தில் திட்டம் செயல்படுத்தும் போது அதற்கு ஏதாவது ஒரு விதத்தில் தடையை தமிழக அரசு ஏற்படுத்தி கெட்ட பெயரை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் மத்திய அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குடியுரிமை திருத்த சட்டம் எந்த சிறுபான்மை சமூகத்தினருக்கும் எதிரானது அல்ல. அரசியலுக்காக எதிர்க்கட்சியினர் சிறுபான்மை மக்களை தூண்டி விடுகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சின்னச் சின்னதாய்...



காளப்பட்டி சாலையில் அமைந்துள்ள டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த மின்சார வாகனங்களின் உதிரிபாகங்கள் மேலாண்மை குறித்த கருத்தரங்கில் பங்கேற்றோர்.

## டாக்டர் என்.ஜி.பி தொழில்நுட்ப கல்லூரியில் மின் வாகன தொழில்நுட்ப கருத்தரங்கு

**● கோவை**

கோவை காளப்பட்டி சாலையில் அமைந்துள்ள டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரியில் மின்சார வாகனங்களின் உதிரிபாகங்கள் மேலாண்மை குறித்த கருத்தரங்கு நடந்தது.

பெருநிறுவனங்கள் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின்(சிஎஸ்ஆர்) நிதி உதவியுடன் கருத்தரங்கு நடத்தப்பட்டது. முதல் நாள் தொடக்க விழாவில் கல்லூரியின் உயிர்மருத்துவப் பொறியியல் துறையின் தலைவர் விஜயகுமார் வரவேற்றார். முதல்வர் பிரபா தலைமை வகித்து பேசினார். பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் அசோக் குமார், ஸ்மார்ட் சார்ஜிங் மற்றும் டிஸ்சார்ஜிங் கான்செப்ட், அதிநவீன பேட்டரி மேலாண்மை அமைப்பு அம்சங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் குறித்த தனது அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். ஒருங்கிணைப்பாளர் இணை பேராசிரியை சித்ரா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பொள்ளாச்சி, டார்க் எக்யூப்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் கார்த்திக், பேராசிரியர் ரமாஷ் குமார் ஆகியோர் பேசினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் திருச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் மின் மற்றும் மின்னணு பொறியியல் துறையின் பேராசிரியர் ராஜா, மின்சார வாகனங்களுக்கான நவீன மின்சார இயக்கிகள் மற்றும் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். உதவி பேராசிரியர் நெடுமால் புகழேந்தி, கோவை மாடலிங் மற்றும் 'எலக்ட்ரிக் வாகனங்களின் கட்டுப்பாடு– ஒரு கணிதக் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் பேசினார்.



ஆர்.வி.எஸ் பொறியியல் கல்லூரி சார்பில் நடைபெற்ற ஹேக்கத்தான் 2024 விழாவில் வெற்றி பெற்றவர்களுடன் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள்.

## ஆர்.வி.எஸ் பொறியியல் கல்லூரி சார்பில் ஹேக்கத்தான் 2024 விழா

**● கோவை**

சூலூர் ஆர்விஎஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஏற்பாடு செய்த 'ஹேக்கத்தான் 2024'ன் தொடக்க விழா அமர்வு கடந்த 7–ம் தேதி கல்லூரி வளாகத்தில் நடந்தது. முதன்மை விருந்தினராக கோவை மாவட்ட தொழில் மையத்தின் திட்ட மேலாளர் மற்றும் உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்) எஸ்.பிருந்தாதேவி, ஆலோசகர் பி.கே.பத்ரி, ஆர்விஎஸ் சிஇடி–யின் முதல்வர் ஜி.மோகன்குமார், ஆர்விஎஸ் டிசிசியின் முதல்வர் எஸ்.விஜயன் ஆகியோர் பேசினர்.

பதிவு செய்த 250–க்கும் மேற்பட்ட அணிகளில் ஆர்விஎஸ் கல்விக் குழுமங்களின் கல்லூரிகளைச் சேர்ந்த 25 அணிகளும், மற்ற கல்லூரிகளைச் சேர்ந்த 25 அணிகளும் தேர்வு செய்யப்பட்டன. இறுதியாக 4 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

நேரு இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜியின் இசிஇ மாணவர்கள் முதலிடம் பிடித்து ரூ.25 ஆயிரம் ரொக்கப்பரிசு பெற்றனர். யோகேஸ்வரன் தலைமையிலான ஆர்விஎஸ் பொறியியல் கல்லூரியின் பிசிஇ மாணவர்கள் 2–ம் இடம் பிடித்து ரூ.15 ஆயிரம், பவித்ரன் தலைமையிலான பிஎஸ்ஜி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மற்றும் அப்ளைடு ரிசர்ச்–ன் சிஎஸ்இ மாணவர்கள் 3–ம் இடம் பிடித்து ரூ.10 ஆயிரம் பரிசு வென்றனர். 4–வது பரிசு ரூ.2ஆயிரம், அருள் ரிஷ்வாக் தலைமையிலான ஆர்விஎஸ் பாலிடெக்னிக் கல்லூரியின் இசிஇ மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

## ரயில் சேவைகளில் மாற்றம்

**● கோவை**

சேலம் கோட்ட ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கோவை ரயில்வே யார்டில் பொறியியல் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக ரயில் சேவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, எண் 06458 ஷொர்னூர் - கோவை ரயில், எண் 16722 மதுரை - கோவை ரயில், எண் 16607 கண்ணூர் - கோவை ரயில் ஆகியவை மார்ச் 15, 18, 20 ஆகிய தேதிகளில் போத்தனூர் வரை மட்டுமே இயக்கப்படும்.


இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.


அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: repkovai@hindutamil.co.in


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ./காடம்பாரை | 001 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/1604/ஒப்பந்தப்புள்ளி/2024

**கோயம்புத்தூர் மாநகராட்சி**
**தொழிற்சாலை பயன்பாட்டுக்கு தண்ணீர் வழங்குதல்**
பார்வை: அரசு ஆணை எண்: 39 ந.நி & கு.வ.து (நநி2) நாள் 06-03-2024

கோவை மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர், உக்கடம் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் இரண்டாம் நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து சுத்தப்படுத்தி தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணிகள் பயன்பாட்டிற்கு குழாய் மூலம் நேரடியாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை மாநகரினை சுற்றி சுமார் 15 கி.மீ சுற்றளவுக்குள் உள்ள தொழிற்சாலைகள், கோழிப்பண்ணைகள், ஃபவுண்டரிகள், கட்டுமான நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் மற்றும் இதர தண்ணீர் பயன்பாட்டாளர்கள் மொத்த தண்ணீர் தேவைக்கு உடனடியாக கோயம்புத்தூர் மாநகராட்சியை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்புக்கு: - cityengineer.coimbatore@gmail.com

போன்:- 98946 74574, 94892 06015 (அலுவல் நேரங்களில் மட்டும்)

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 12-03-24.

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

வெ.ஆ.எண்.205/2024/செ.ம.தொ.அ./கோவை

**S.I. கேப்பிடல் & பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம் : எண். 27, முதல் தளம், புதிய திட்ட சாலை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர், தமிழ் நாடு - 642001
Website : www.sicapital.co.in Email : info@sicapital.co.in Phone : 04259-233304 / 05
CIN : L67190TZ1994PLC040490

**வீடியோ கான்பரன்சிங் (VC) / பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (OAVM) மற்றும் மின்வாக்கு வழிமுறைகள் மூலம் நடத்தப்படும் 2/2023-2024 கூடுதல் சாதாரண பொதுக் கூட்டம் குறித்து SI கேப்பிடல் & பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட் பங்குதாரர்களின் கவனத்திற்கான அறிவிப்பு**

EGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வணிகத்தை பரிவர்த்தனை செய்ய தார்மேட் லிமிடெட் ("நிறுவனம்") உறுப்பினர்களின் **02/2023-24 கூடுதல்-சாதாரண பொதுக்கூட்டம் (EGM) 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி வெள்ளிக்கிழமை** அன்று **பிற்பகல் 03.00 (IST)** மணிக்கு வீடியோ கான்பரன்சிங் ("VC") / பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் **("OAVM")** மூலம் நடைபெறும் என அறிவிப்பாகும், ("OAVM") நிறுவனங்களின் சட்டம் 2013 ("சட்டம்") மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் SEBI (பட்டியலிடுதல்) கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றுடன் இணங்குதல் தேவைகள்) விதிமுறைகள் 2015 ("பட்டியல் ஒழுங்குமுறைகள்") பொது சுற்றறிக்கைகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("MCA") மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ("SEBI") வெளியிட்ட அறிவிப்புகளுடன் (ஒட்டுமொத்தமாக "தொடர்புடைய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது).

உறுப்பினர்கள் VC / OAVM மூலம் EGM-ல் கலந்துக்கொள்ள முடியும். VC / OAVM வசதி மூலம் EGM-ல் பங்கேற்கும் உறுப்பினர்கள் EGM-ல் இருப்பதாக கருதப்படுவார்கள் மற்றும் அவர்களின் இருப்பு நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 103-ன்கீழ் கணக்கிடப்படும்.

தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, EGM அறிவிப்பின் மின்னணு நகல்கள் மற்றும் விளக்க அறிக்கை நகல்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய பிற ஆவணங்கள், மின்னஞ்சல் முகவரிகள் உள்ள நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் 13 மார்ச் 2024 புதன்கிழமை அன்று மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன. நிறுவனம்/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம்(கள்) பதிவு செய்யப்பட்ட கட்-ஆப் தேதி அதாவது வெள்ளிக்கிழமை, 8 மார்ச் 2024 அன்று அனுப்பப்பட்டுள்ளன.

அறிவிப்பு மற்றும் பிற ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான **www.sicapital.co.in** மற்றும் பங்குச்சந்தையின் இணையதளத்தில் அதாவது **www.bseindia**-ல் உள்ள BSI லிமிடெட் மற்றும் CDSL -ன் மின்-வாக்களிப்பு இணையதளத்தில் **https://www.evotingindia.com** கிடைக்கும்.

சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் (CDCL) வீடியோ கான்பரன்சிங் மூலம் கூட்டத்தை கூட்டுவதற்கான தளத்தை வழங்குவதற்காக நிமிக்கப்பட்டுள்ளது, வீடியோ கான்பரன்சிங், மின்-வாக்களிப்பு மற்றும் தரவு செயலாக்கம் ஆகியவற்றின் மூலம் கூட்டத்தை நடத்துவதற்கான முழு செயல்முறையையும் கையாளவும் மேற்பார்வை செய்யவும், கூட்டம் மற்றும் வாக்களித்தல் போன்றவையும் அடங்கும். மேலும், உறுப்பினர்கள் VC / OAVM வசதி மூலம் மட்டுமே EGM-ல் சேரலாம் மற்றும் பங்கேற்கலாம். EGM-ல் சேர்வதற்கான வழிமுறைகள் மற்றும் பங்கேற்பதற்கான வழிமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

**மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யும் / புதுப்பிக்கும் முறை :**

மின்னஞ்சல் ஐடிகளைப் பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை:

a) பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், கையொப்பமிடப்பட்ட கோரிக்கை கடிதத்தின் ஸ்கேன் நகலை, நிறுவனத்தின் இணையத்தில் கிடைக்கும் பரிந்துரைக்கப்பட்ட படிவமான ISR-1-ல் அனுப்பலாம், போலியோ எண்., முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரி மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட சுய சான்றொப்பத்துடன் பதிவு செய்யப்பட வேண்டும். PAN-ன் நகல் மற்றும் உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரியை ஆதரிக்கும் எந்த ஆவணமும் (ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், வங்கி அறிக்கை, ஆதார் போன்றவை), info@sicapital.co.in என்ற நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி அல்லது RTA அலுவலக முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் லிங்க் இன்டைம் இந்தியா லிமிடெட், சூர்யா 35, மேப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சௌரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் - 641028 என்ற முகவரியில் அல்லது coimbatore@linkintime.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு RTA-க்கு மின்னஞ்சல் செய்யவும்.

b) எலக்ட்ரானிக் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், நிறுவனத்திடமிருந்து அனைத்து தகவல் தொடர்புகளையும் மின்னணு முறையில் பெறுவதற்காக தங்களின் மின்னஞ்சல் முகவரியை அந்தந்த DP-களுடன் பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

EGM-ன் அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தில் உறுப்பினராகி மின்னணு வாக்குப்பதிவுக்கான கட்-ஆப் தேதியில் அதாவது மார்ச் 29, 2024 அன்று பங்குகளை வைத்திருக்கும் எவரும், பயனர் ஐடி மற்றும் கடவுச்செல்லை வழங்கப்பட்டுள்ள முறையில் பெறலாம். EGM-ன் அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளமான **www.sicapital** மற்றும் **www.evotingindia.com** என்ற CDSL-ன் மின்-வாக்களிப்பு இணைதளத்தில் கிடைக்கும். அத்தகைய EGM அறிவிப்பில் நிறுவனம் குறிப்பிட்ட விதத்தில், மின்-வாக்களிப்பு முறைகளைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

**EGM-ன் போது தொலை மின்-வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்புக்கான வழிமுறைகள் :**

a) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 108-க்கு இணங்க, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ன் விதி 20 உடன் படிக்கவும், செயலகத் தரநிலைகள்-2 இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொதுக் கூட்டங்கள் மற்றும் SIBI-ன் 44 வது விதிமுறை (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, திருத்தப்பட்டபடி, EGM-ல் மின்னணு வழிகளில் ("மின்-வாக்களிப்பு") நிறைவேற்றப்படும் தீர்மானங்களில் வாக்களிக்கும் உரிமையை அதன் உறுப்பினர்களுக்கு நிறுவனம் வழங்குகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் CDSL-ன் மின்னணு வாக்குப்பதிவு முறையைப் பயன்படுத்தி உறுப்பினர்கள் தொலைவிலிருந்து வாக்களிக்கலாம் ("ரிமோட் மின்-வாக்களிப்பு").

b) மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலம் வாக்களிக்கும் வசதி EGM ("Insta Poll")-ல் கிடைக்கும் மற்றும் EGM-ல் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் தொலை மின்-வாக்களிப்பு மூலம் Insta Poll மூலம் EGM வாக்களிக்க முடியும்.

c) நிறுவனம் மத்திய டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) -ன் சேவைகளை மின்-வாக்களிக்கும் வசதியை வழங்கும் நிறுவனமாக ஈடுபட்டுள்ளது.

d) மின் வாக்களிப்பு தொடர்பான பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல் விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. VC / OAVM மூலம் EGM-ல் கலந்து கொள்வதற்கு அதே உள்நுழைவு சான்றுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

e) தொலைநிலை மின்-வாக்களிப்பு மற்றும் Insta Poll மூலம் வாக்களிக்கும் விதம், dematerailzed முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு EGM-ன் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இணையதளத்திலும் கிடைக்கிறது, நிறுவனம் : **www.sicapital.co.in** மற்றும் பங்குச் சந்தையின் இணைய தளத்தில் அதாவது BSE லிமிடெட் www.bseindia.com மற்றும் CDSL-ன் இணையதளத்தில் www.evotingindia.com கிடைக்கும்.

ரிமோட் மின் வாக்களிக்கும் வசதி பின்வரும் வாக்களிப்பு காலத்தில் கிடைக்கும்:

**மின்னணு வாக்குப்பதிவு காலம் : 2வது ஏப்ரல் 2024 காலை 9.00 மணி முதல் (IST)**

**மின்னணு வாக்குப்பதிவு முடிவு: 4வது ஏப்ரல் 2024 மாலை 5.00 மணி வரை (IST)**

மேற்கூறிய தேதி மற்றும் நேரம் அப்பால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது மேலும் மேற்கூறிய காலம் முடிவடைந்தவுடன் தொலைநிலைமின்-வாக்களிக்கும் வசதி CDSL-ஆல் உடனடியாக முடக்கப்படும்.

தொலை மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் EGM-ல் கலந்து கொள்ளலாம், ஆனால் EGM-ல் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்-ஆப் தேதியில் அதாவது வெள்ளிக்கிழமை 29 மார்ச் 2024 அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும்.

CDSL மின்-வாக்களிப்பு முறையில் EGM & e-voting-ல் கலந்து கொள்வது தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது விளக்கம் இருந்தால், **helpdesk.evoting@cdslindia.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா எண். 1800 22 55 33-ல் தொடர்பு கொள்ளலாம்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, சீனியர் மேலாளர் (CDSL) Central Depository Services (India) Limited, A விங், 25வது தளம், மாரத்தான் பிஃச்சர்ஸ், மபத்லால் மில் காம்போன்ட்ஸ், N M ஜோஷி மார்க், லோவர் பாரல் (கிழக்கு), மும்பை - 400013 அல்லது மின்னஞ்சல் helpdesk.evoting@cdslindia.com மூலம் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா எண். 1800 22 55 33-ல் தொடர்பு கொள்ளவும்.

CS K ஸ்ரீகிருஷ்ணா குமார், நடைமுறையில் உள்ள நிறுவனச் செயலர் (உறுப்பனர் எண். FCS 5913), EGM -ல் தொலைதூர மின்னணு வாக்குபதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்ய ஆய்வு செய்பவராக நியமிக்கப்பட்டுள்ளார். மின்னணு வாக்குப்பதிவின் முடிவுகள், ஆய்வு செய்பவரின் அறிக்கையுடன் நிறுவனத்தின் இணையதளமான **www.sicapital.co.in**-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, நிறுவனத்தின் பத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ள BSE லிமிடெட் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படும்.

EGM-ன் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குறிப்புகளையும் மற்றும் குறிப்பாக, EGM-ல் சேர்வதற்கான வழிமுறைகள், தொலைதூர மின்-வாக்களிப்பு மூலம் அல்லது EGM-ல் மின்னணு வாக்களிப்பு (Insta Poll) மூலம் வாக்களிக்கும் முறை ஆகியவற்றை உறுப்பினர்கள் கவனமாக படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி
**SI கேப்பிடல் & பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்**
(Sd/-) **சுஜீத் K ரவீந்தரநாத்**
நிறுவன செயலாளர் & உடன்பாடு அதிகாரி

நாள் : 13.03.2024
இடம் : திருச்சூர்

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
குறுகிய கால ஒப்பந்தப் புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) – (இரண்டு உறை) – இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண். | எண். 41,42,45,46 / கோ. வெள்ளசேதம் /வஅ2 / ஒ பி / 2024 / நாள். 12 .03.2024 |
| ஒப்பந்தக்காரர் தகுதி | முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்) |
| ஒப்பந்தப் புள்ளி வரவேற்பவர் | தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் | **15.03.2024** முதல் **21.03.2024 ,15.00** மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகை | Online முறையில் இணையதளம் **"https://tntenders.gov.in"** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம் | **18.03.2024** அன்று முற்பகல் **11.00** மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வா, மதுரை. |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | **21.03.2024** அன்று **15.00** மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் **"https://tntenders.gov.in"** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | **22.03.2024** அன்று **15.30** மணிக்கு மின்னணு ஒப்பந்தம் முறையில் |

| ஒ. கே. எண் | திட்டத்தின் பெயர் | உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட) (ரூ. கோடி) | முன்வைப்பு தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| | **வடகிழக்கு பருவ மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கின் போது ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள்– நெகிழ்வு நிதி – ஜல் ஜீவன் திட்டம்– திருநெல்வேலி மாவட்டம்** | | |
| 41 | மானூர் மற்றும் 407 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூ.கு.தி. | 6.31 | 4.75 |
| 42 | 1)சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள 113 ஊரகக்குடியிருப்புகள், 2)பணகுடி – வடக்கு வள்ளியூர் பேரூராட்சி மற்றும் 168 வழியோர குடியிருப்பு கூ.கு.தி. | 3.80 | 2.85 |
| 45 | நாங்குநேரி–திசையன்விளை கூ.கு.தி. | 4.85 | 3.65 |
| 46 | 1)20 ஊ.கு 2)பொன்னகுடி 3) மூலக்கரைப்பட்டி பேரூராட்சி 4)நரசிங்கநல்லூர் 5) 15 ஊ.கு 6)34 ஊ.கு 7)சங்கர்நகர் 8)பர்கித்மாநகர் 9) 183 குடியிருப்புகள் 10) கூடங்குளம் 11)சங்கரன் கோவில் 12)சேந்தமங்கலம் 13)ரெட்டியார்பட்டி 14)பிரம்மதேசம் கூ.கு.தி. | 3.96 | 3.00 |

செ.ம.தொ.இ/ 1614 /ஒப்பந்தப்புள்ளி/2024
தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்
**தலைமைப் பொறியாளர், தகுவவா, மதுரை.**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
குறுகிய கால ஒப்பந்தப் புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) – (இரண்டு உறை) – இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண். | எண். 43 – 44 /கோ. வெள்ளசேதம் /வஅ2 / ஒ பி / 2024 / நாள். 12.03.2024 |
| நிதி | நெகிழ்வு நிதி – ஜல் ஜீவன் திட்டம் |
| ஒப்பந்தக்காரர் தகுதி | முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்) |
| ஒப்பந்தப் புள்ளி வரவேற்பவர் | தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் | **19.03.2024 முதல் 03.04.2024 15.00 மணி** வரை |
| ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகை | Online முறையில் இணையதளம் **"https://tntenders.gov.in"** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம் | **25.03.2024 அன்று முற்பகல் 11–00 மணிக்கு** தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வா, மதுரை. |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | **03.04.2024 அன்று 15.00 மணிக்குள்** மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் **"https://tntenders.gov.in"** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | **04.04.2024 அன்று 15.30 மணிக்கு** த. கு. வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், மதுரை மின்னணு ஒப்பந்தம் முறையில் |

| ஒ. கே. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட) (ரூ. கோடி) | முன்வைப்பு தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| | **வடகிழக்கு பருவ மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கின் போது ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள்** | | |
| 43 | தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு, கழுகுமலை, எட்டயாபுரம் பேரூராட்சிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் நகராட்சி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 161 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த்திட்டங்கள் | 14.38 | 10.80 |
| 44 | விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, காரியாபட்டி, விருதுநகர்(பகுதி) திருச்சுழி மற்றும் நரிக்குடி ஒன்றியங்களுக்குட்பட்ட 637 ஊரகக்குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த்திட்டங்கள் | 11.53 | 8.65 |

செ.ம.தொ.இ/ 1583 /ஒப்பந்தப்புள்ளி / 2024
தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்
**தலைமைப் பொறியாளர், தகுவவாரியம், மதுரை**

தமிழ்நாடு அரசு
**சேலம் மாநகராட்சி**

ந.க.எண்.இ2 / 14447 / 2023 — நாள்: 13.03.2024

**மூலதன மான்ய நிதி**
**மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரட்டை உறை முறை)**

1. சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் மண்டலம் எண்–1, அஸ்தம்பட்டி மண்டலம், எண்–2, அம்மாப்பேட்டை மண்டலம் எண்–3, கொண்டலாம்பட்டி மண்டலம் எண்–4, ஆகிய பகுதிகளில் உள்ள OHT நீர் நிலை மற்றும் அழுத்தம் ஆகியவற்றை சேகரிப்பதற்காக IOT நெட்வொர்க் உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் செயல்படுத்தும் பணி மதிப்பீடு தொகை ரூ. 4.29 கோடி.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் விபரங்கள் www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் இருந்து இலவசமாக 14.03.2024 முதல் 02.04.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 14.03.2024 முதல் 02.04.2024 மாலை 3.00 மணி வரை
   ஒப்பந்தப்புள்ளி திறப்பு – 02.04.2024 மாலை 3.30 மணி

ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி.

செ.ம.தொ.இ./1590/ஒப்பந்தப்புள்ளி/2024

**GREATER CHENNAI CORPORATION**
**ELECTRICAL DEPARTMENT - IT CELL**

I.T.C.C.No.C1/4590/2023

**e-TENDER NOTICE**

*e-tenders are invited for the following work by S.E (Electrical) in Two Cover System as per details furnished below*

**Installation and Monitoring with Maintenance of 289 Nos. of On-line vehicle tracking system using GPS/GIS units for conservancy vehicles on hire basis for a period of 3 years**

**Value of Work in Rs.1,31,29,224/-** | **E.M.D Amount in Rs. 1,31,292/-**

Bid document will be available in web site https://tntenders.gov.in

Last date and time to submit the filled in tender document: 27 - 03 - 2024 upto 03.00 P.M

Tender opening date and time: 28 - 03 - 2024 at 03.15 P.M

Pre-bid Meeting Date & Time: 22 - 03 - 2024 at 04.00PM, Smart Governance Centre, Green Building, 3rd floor, IT Wing, Ripon Building Complex, Greater Chennai Corporation, Ch - 03.

DIPR / 1589 / TENDER / 2024 — **Superintending Engineer (Electrical)**

**வரி விளம்பரங்கள்**

**கல்வி**

**பயிற்சி வகுப்புகள்**

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

I,Manoj Natarajan residing at 13,ST-1,Kunjipalayam, Pollachi have changed my minor Daughter's name from Laya to Laya Manoj for all future purposes.

**பிறசேவை பகுதி**

**அறிவிப்பு**

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**C.P. No. 254 of 2012**

Anjani Associates
76, Perundurai road, 2nd Floor, Upper of Easybuy showroom, Collectorate Bus Stop, Erode-638011 ...Petitioner

Vs

Dhandapani Spinning Mills Ltd., Registered Office : 17F, Rajaji Road, Salem-636007 ...Respondent

The above Company Petition in C.P 254 of 2012 came up before the Hon'ble High Court on 08.03.2024 wherein the Hon'ble Court has in pursuance to the order dt. 07.08.2023 in OSA No.75 of 2014 of the Hon'ble Division Bench, has admitted the said Company petition and has ordered paper publication in the above matter and posted the matter after 4 weeks. Hence the above Company Petition will be listed before this Hon'ble Court for hearing on 05.04.2024. Therefore, kindly be present in the court on the said date or the matter will be proceeded in your absence on merits.

Dated at Chennai on this the 11th day of March 2024
Counsel for Petitioner


dijeesh.v@hindutamil.co.in

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

CMYK CB-CB

# PM lays foundation stone for three chip units worth ₹1.25-lakh crore

